ஈழநாடு
மின்னிதழ் E-paper
Eelanadu ඊළනාඩු
26.06.2020 வெள்ளிக்கிழமை

## வடக்குக் கடலில் 57 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 26

சட்டவிரோதமாக கடல் மார்க்க மாகக் கடத்தி வரப்பட்ட கேரளக் கஞ்சாவுடன் வடக்கு கடற் பரப்பில் இரண்டு பேர் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் அதிகாலை வடக்கு கடற்பரப்பில் மேற்கொள்ளப் பட்ட விசேட சோதனை நட வடிக்கையின்போது சந்தேகத் திற்கிடமான டிங்கி படகொன் றைச் சோதனையிட்டபோது

02

# கூட்டமைப்பின் மிரட்டலுக்கு அடிபணிய அரசு தயாரில்லை



## கோட்டா அரசு திட்டவட்டம்!

கொழும்பு, ஜூன் 26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மிரட்டலுக்கு இந்த அரசு அடி பணியப் போவதில்லை என கோட்டா அரசு தரப்பில் திட்டவட்டமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மிரட்டல்களுக்கு அரசு ஒரு போதும் அடிபணியாது. நாட்டின் உள்விவகாரங்களில் வெளிநாடு கள் தலையிட முடியாது. அதை மீறித் தலையிட வெளிநாடு களுக்கு இந்த அரசு அனுமதி வழங்கவில்லை என்று வெளி விவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

02

## எனது கருத்துக்களை பூதாகாரமாக்குவதில் அர்த்தமே இல்லை!

### சொல்கிறார் கருணா

கொழும்பு, ஜூன் 26

தேர்தல் பிரசாரத்துக்காக நான் தெரிவித்த கருத்துக்களைப் பூதாகாரமாக்குவதில் எந்த அர்த்தமும் இல்லை எனக் கருணா அம்மான் எனப்படும் முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித் துள்ளார்.

02

## சி.ஐ.டியில் கருணாவிடம் 7 மணி நேரம் விசாரணை!



கொழும்பு, ஜூன் 26

முன்னாள் பிரதி அமைச்சர் கருணா என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் நேற்று குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தில், விசாரணைகளுக்காக முன்னிலையானார்.

02

## கருணாவின் கருத்து மிலேச்சத்தனமானது!

### கொதிக்கின்றார் எஸ்.பி.

கொழும்பு, ஜூன் 26

கருணா அம்மான் வெளியிட்ட கருத்தை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அதற்குக் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கின்றேன் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட வேட்பாளரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

02

## பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களை ஏமாற்றினாரா வடக்கு மாகாண ஆளுநர்?






முல்லைத்தீவு, ஜூன் 26

முல்லைத்தீவு மாவட்டத் தில் உள்ள புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் மகா வித்தியாலயத்தில், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடி கட்டடத் திறப்பு

02

## அபாயகர கட்டத்தில் இலங்கை!

### சுகாதாரப் பணிப்பாளர் அதிருப்தி

கொழும்பு, ஜூன் 26

சமகாலத்தில் இலங்கை மக்களின் செயற்பாடுகள் வருத்தமளிப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

கொரோனா அச்சுறுத்தலை அடுத்து நாட்டில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் பின்னர் பொது போக்குவரத்து சேவை மற்றும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற வரும் மக்களின் செயற்பாடு வருத்தமளிப்பதாக அவர் கூறியுள்ளார்.

பலர் சுகாதார வழிமுறைகளுக்கு அமையச் செயற்படுவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமூக இடைவெளிகளை கடைப் பிடிக்காமல் ஒருவருக்கு ஒருவர் நெருக்கமாக செயற்படுகின்றனர் என

02

## நிவாரணம் கொடுத்ததை பேஸ்புக்கில் பதிவிட்டாலும் அது தேர்தல் விதிமீறல்!

யாழ்ப்பாணம், ஜூன் 26

நிவாரணப் பொருள்களை வழங்கிவிட்டு, அதனை பேஸ்புக்கில் பதிவிட்டாலும் அதுவும் தேர்தல் விதிமுறை மீறலாகவே கருதப்படுமென யாழ்ப்பாணம் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் கி.அமலராஜ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில், தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து நேற்று வரையான காலப்பகுதியில், ஒரு தேர்தல் வன்முறைச் சம்பவம் பதிவாகியுள்ள அதேவேளை, தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் 22 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளனவெனவும் அவர்

02

## சட்டத்தரணி மாஸ்க் அணியாது விசாரணை செய்வதை மன்றிடம் முறையிட்டார் சாட்சி



### யாழ்.நீதிமன்றில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் மூத்த சட்டத்தரணி முடியப்பு றெமிடியஸ் முகக் கவசம் அணியாது குறுக்கு விசாரணை செய்வது தொடர்பில் சாட்சியான மு.தம்பிராசா

02

## சைக்கிள் வேட்பாளர் வீட்டுக்குள்



திருமலை, ஜூன் 26

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் திருகோணமலை மாவட் டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர், தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு ஆதரவு வெளியிட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் சார்பில்

02

## கொரோனா நிலவர அறிக்கை

| தொற்றாளர் | புதிய தொற்றாளர் | சிகிச்சை பெறுவோர் | சந்தேகநபர்கள் | குணமடைந்தோர் |
|---|---|---|---|---|
| 2007 | 06 | 394 | 36 | 1,602 |

இறப்பு 11

மூலம் : சுகாதார மேம்பாட்டு பணியகம்

## வடக்குக்...

அதிலிருந்து 57.275 கிலோ கிராம் கேரளக் கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதன்போது கைது செய்யப்பட்ட 33 மற்றும் 39 வயதுடைய இரண்டு சந்தேகநபர்கள், டிங்கிப் படகு மற்றும் கேரள கஞ்சாப் பொதிகள் ஆகியன மேலதிக விசாரணைகளுக்காக ஊர்காவற்துறை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தினுள் மாத்திரம் இதுவரை 2911 கிலோ கிராம் கேரளக் கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகக் கடற்படை தரப்பில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை...

விழா வடக்கு மாகாண ஆளுநர் வராததமையால் கைவிடப் பட்டுள்ளது.

வள்ளிபுனம் மகா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடி கட்டடத் திறப்பு விழா நேற்றுப் பிற்பகல் 1 மணிக்கு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

வடமாகாண ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, புதிய கட்டடத் தொகுதியைத் திறந்து வைப்பார் என்றும் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது.

இந்த திறப்பு விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும், பிற்பகல் 12.30 மணிக்கு முன்னதாகவே செய்து முடித்துவிட்டு பாடசாலை வளாகத்தில் காத்திருந்த ஆசிரியர்களும், மாணவர்களும் ஆளுநர் வராததமையால் ஏமாற்றமடைந்தனர்.

அதேவேளை, முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெறும் கூட்டத்தில் பங்கேற்பதற்காக, வடக்கு மாகாண ஆளுநர் பிற்பகல் 1.50 மணியளவில் பாடசாலையைக் கடந்து சென்றுள்ளார்.

இதனால், திறப்பு விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்த ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் ஏமாற்றத்துடன் அங்கிருந்து சென்றுள்ளனர்.

## சட்டத்தரணி...

மன்றிடம் முறையிட்டார். அதனால் சட்டத்தரணியைச் சமூக இடைவெளியைப் பேணிச் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்யுமாறு மன்று அறிவுறுத்தல் வழங்கியது.

அரசியல் செயல்பாட்டாளர் க.மு. தம்பிராசாவிடம் 6 லட்சம் ரூபா பணத்தை வாங்கி நம்பிக்கை மோசடி செய்த குற்றச்சாட்டு வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கில் எதிரி சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி மு.றெமிடியஸ், சாட்சியான மு.தம்பிராசாவிடம் சுமார் ஒரு மணிநேரம் குறுக்கு விசாரணையை முன்னெடுத்தார்.

ஒரு கட்டத்தில் சாட்சி மு.தம்பிராசா, மன்றிடம் முறைப்பாடு ஒன்றை முன்வைத்தார்.

எதிரி தரப்புச் சட்டத்தரணி முகக்கவசம் அணியாமல் தனக்கு அருகே வந்து குறுக்கு விசாரணை செய்கின்றார் என்று சாட்சி தனது முறைப்பாட்டை முன்வைத்தார்.

சாட்சியின் முறைப்பாட்டையடுத்து, எதிரி தரப்புச் சட்டத்தரணியைச் சற்று தூரத்திலிருந்து குறுக்கு விசாரணையை முன்னெடுக்குமாறு மன்று அறிவுறுத்தல் வழங்கியது.

அதனடிப்படையில் குறுக்கு விசாரணையை மூத்த சட்டத்தரணி மு.றெமிடியஸ் முன்னெடுத்தார்.

# அடுத்த மாதம் முதற் பகுதியில் கூட்டமைப்பின் விஞ்ஞாபனம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கை அடுத்த மாதம் முற்பகுதியில் வெளிவரும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் அறிக்கையைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. பங்காளிக் கட்சித் தலைவர்களுடனும் கலந்துரையாடியே தேர்தல் அறிக்கை தயாரிக்கப்படுகின்றது.

எமது தேர்தல் அறிக்கையில் பல விடயங்களைக் குறிப்பிடவுள்ளோம். 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரையிலான 5 ஆண்டுகளில் அரசியல் தீர்வு, காணி விடுவிப்பு, மீள்குடியமர்வு, வேலைவாய்ப்பு உள்ளிட்ட விடயங்களில் ஏற்பட்ட முன்னேற்றத்தை வெளியிடவுள்ளோம்.

இன்னமும் என்னென்ன விடயங்கள் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிடவுள்ளோம். மேலும், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வகிபாகம் என்ன என்பதையும் சுட்டிக்காட்டவுள்ளோம்.

இதேவேளை, நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் எந்த அரசு அமைந்தாலும், அவர்களுடன் கூட்டமைப்பு எவ்வாறான விடயங்களை எந்த அணுமுமுறையின் அடிப்படையில் பேச்சு நடத்தவுள்ளது என்பன உள்ளிட்ட விடயங்களும் தேர்தல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கும்- என்றார்.

## கூட்டமைப்பின்...

"கிழக்கு மாகாணத்தின் சகல தொல்பொருள் பிரதேசங்களையும் பாதுகாக்கும் வகையிலேயே ஜனாதிபதி செயலணியை ஜனாதிபதி நிறுவியுள்ளார். தமிழர்களின் வரலாற்றை மாற்றியமைப்பது இந்தச் செயலினியின் நோக்கமல்ல" எனவும் அவர் குறிப்பிட்டார்.

'கிழக்கு மண்ணில் தமிழர் வரலாற்றை மாற்றியமைக்கும் நோக்கில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி செயலணியை அமைத்திருக்கும் நிலையில், இந்த விவகாரத்தில் தலையிட்டு எமக்கு உதவ வேண்டிய தார்மீக பொறுப்பு இந்தியாவுக்கு உள்ளது' என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் மாவை சேனாதிராசா தெரிவித்திருந்தார். அவரின் இந்தக் கருத்துத் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

என்ன பிரச்சினைக்கும் இலங்கை அரசு தீர்வு தராது, சர்வதேசம்தான் தீர்வு தரும் என்று கூறி மக்களை ஏமாற்றுவதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் இயல்பு. இப்போது தேர்தல் காலம் என்றபடியால் அவர்களின் பசப்பு வார்த்தைகள் அதிகமாக இருக்கும்.

இந்தப் பசப்பு வார்த்தைகள் மூலமும், பொய்யான வாக்குறுதிகள் மூலமும், பொய்யான பரப்புரைகள் மூலமும் தமிழ் மக்களின் வாக்குகளைச் சுருட்டுவதில் கூட்டமைப்பினர் மும்முரமாக இருக்கின்றனர்.

எனவே, இந்தப் பசப்பு வார்த்தைகளை நம்பி தமிழ் மக்கள் இனியும் ஏமாறக்கூடாது. சந்தேகங்கள் இருந்தால் - பிரச்சினைகள் இருந்தால் அரசுடன்தான் பேச வேண்டும். அதைவிடுத்து வெளிநாடுகள், சர்வதேச அமைப்புகள் தலையிடும் என்று நம்புவதில் பயனில்லை.

நாட்டிலுள்ள தமிழ், முஸ்லிம், சிங்களம் ஆகிய மூவின மக்களும் ஒரு தாயின் பிள்ளைகள் என்ற தூ ய எண்ணத்துடன்தான் ஜனாதிபதி பணியாற்றுகின்றார்" - என்றார்.

## எனது...

அண்மையில் தெரிவித்திருந்த சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பாக நேற்றுக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் காலை முன்னிலையாகிய அவர் நீண்ட வாக்குமூலம் அளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் நடந்த உண்மையைக் கூறியிருக்கின்றேன். எதுவித தவறான கண்ணோட்டத்திலும் எதுவும் நான் கொடுக்கவில்லை. எவரையும் புண்படுத்தும் விதத்திலும் நான் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ளவில்லை.

இந்த நாட்டு மக்களை நாங்கள் நேசிக்கின்றோம். எங்கள் தேர்தல் பிரசாரம் தொடரும். ஆனால் எதுவித வன்முறையும் இனத்துவேசமும் இல்லாத விதத்தில் தேர்தல் பிரசாரத்தைக் கொண்டு செல்வோம்.

எனது கருத்து தொடர்பில் நாட்டின் பல பாகங்களிலும் அரசியல்வாதிகள் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

அது தவறான விடயம். அந்தக் காலத்தில் நடந்த விடயத்தை ஒரு உவமைக்காக, மேடைப் பிரசாரமாக, தேர்தல் பிரசாரமாகக் கூறப்பட்ட விடயம். ஆகவே, இதைப் பூதாகரமாக்குவதில் எதுவித அர்த்தமும் இல்லை. எங்கள் அரசுக்கு சிங்கள மக்களின் வாக்குகளைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற பிரச்சினை இது. ஆகவே, இதை நாங்கள் முறியடித்து வெற்றியடைவோம்.

அம்பாறை மாவட்டத்தில் நாங்கள் ஒரு தனித் தமிழ் கட்சியாகப் போட்டியிடுகின்றோம். என்னைப் பொறுத்தவரை எந்தவொரு கட்சியினரையோ, எந்தவொரு மத குருமார்களையோ புண்படுத்துகின்ற மாதிரி எதுவும் கதைக்கவில்லை. அதேநேரத்தில், இராணுவத்தையும் நாங்கள் குறைக்க விரும்பவில்லை. எங்களது இராணுவம் பல சாதனைகளைப் படைத்து பல அனர்த்தங்கள் வருகின்ற போது மக்களை காப்பாற்றிக் கொண்டிருக்கின்ற இராணுவம். அந்த வகையில் நான் அதனை ஒரு நாளும் குறைத்து எதனையும் கூறவில்லை- என்றார்.

## அபாயகர...

அவர் கூறியுள்ளார்.

விசேடமாக பொதுப் போக்குவரத்து சேவைகளில் பயணிக்கும்போது ஒரு ஆசனத்தில் ஒரு பயணி பயணிப்பதுடன், முகக் கவசம் அணிவது மிகவும் முக்கியமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான இடங்களில் சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றாமல் இருப்பது ஆபத்தாக மாறும். இவ்வாறான பல இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தல் காலப்பகுதியில் சுகாதார சட்டங்களை முழுமையாக செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

## சி.ஐ.டியில்....

அவரிடம் 7 மணிநேரம் விசாரணைகள் நடத்தப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அம்பாறை- நாவிதன்வெளியில் நடந்த தேர்தல் கூட்டம் ஒன்றில், வெளியிட்ட கருத்து தொடர்பாக, வாக்கு மூலம் அளிப்பதற்காகவே, அவர் நேற்று குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தில் முன்னிலையானார்.

## கருனாவின்...

கொத்மலை நவதிஸ்பனை பகுதியில் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாணத் தலைவராக செயற்பட்டவரே கருணா. அப்போது அவர் எமது இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகளை கொன்றிருக்கலாம். பிரபாகரனிடமிருந்த சிறந்த இராணுவத் தலைவரே அவர். எனினும் தீர்க்கமான கட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் இருந்த புலிகளின் தலைமையகத்தை தீயிட்டுக் கொளுத்திவிட்டு, எமது இராணுவத்துடன் இணைந்து கொண்டார். இதனால் கிழக்கு மாகாணத்தை விரைந்து கைப்பற்றக் கூடியதாக இருந்தது. தொப்பிக்கல போன்ற தாக்குதல்களுக்கு ஒத்துழைப்பு வழங்கினார். அதன் பின்னரே அரசுடன் இணைந்தார்.

சட்டத்தின் முன், அரச சாட்சியாக மாறி இழைத்த தவறிலிருந்து விடுபடுவதற்கு எந்தவொரு நபருக்கும் முடியும். கருணா அம்மான் இழைத்த தவறுகளில் இருந்து அவரை விடுபட வைக்க நான் முயற்சிக்கவில்லை. ஆனால், தீர்க்கமான கட்டத்தில், தீர்க்கமான ஒத்துழைப்பை வழங்கியவர்தான் அவர்.

கருணா அம்மானின் கருத்தானது மிலேச்சத்தனமானது. அப்படியொரு கருத்தை அவர் வெளியிட்டிருக்கக்கூடாது. அந்த கருத்தை அனுமதிக்கமாட்டோம். இதற்காக கருணா கவலையடைய வேண்டும். வேதனை அனுபவிக்க வேண்டும். அவரின் கூற்றை கண்டிக்கின்றேன். கடும் அதிருப்தி யையும் வெளியிடுகின்றேன்-என்றார்.

## நிவாரணம்...

கூறினார்.

பதிவாகியுள்ள தேர்தல் வன்முறைச் சம்பவமானது, அண்மையில், தென்மராட்சியில் இடம்பெற்ற தனியார் ஊடக நிறுவனத் தாக்குதல் சம்பவமெனத் தெரிவித்த அவர், இதனை விட பாரிய சம்பவங்கள் எவையும் இதுவரை பதிவாகவில்லையெனவும் கூறினார்.

தேர்தல் சட்ட விதிகளை மீறி வைக்கப்பட்டுள்ள பதாகைகள் அகற்றப்பட்டுள்ளனவெனவும், அமலராஜ் தெரிவித்தார்.

## சைக்கிள்...

திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும், பேரின்பவரதன் லக்ஷ்மன் என்ற வேட்பாளரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து கொண்டுள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை, திருகோணமலையில் உள்ள அவரது இல்லத்தில் நேற்றுக் காலை சந்தித்த லக்ஷ்மன், கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஊடகவியலாளர் சந்திப்பிலும் அவர் கலந்து கொண்டு, திருகோணமலையில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதால் இந்த முடிவை எடுத்திருப்பதாகக் கூறியுள்ளார்.

Eelanadu
26.06.2020 வெள்ளிக்கிழமை

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

# யாரிந்த ரணில்

விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் கிழக்கு தளபதியும் பின்னர் அரசாங்கத்தோடு இணைந்து செயற்பட்டவருமான கருணா எனப்படும் வியாகமூர்த்தி முரளிதரன் ஏற்படுத்திய அரசியல் கொந்தளிப்பு இன்னும் ஓயவில்லை. அவரைக் கைதுசெய்ய வேண்டுமென்று ஒரு பிரிவு சிங்கள கடும்போக்குவாதிகள் வலியுறுத்தி வருகின்றனர். இன்னொரு பிரிவோ, கோட்டபாய – மஹிந்த தரப்பிற்கு எதிரான பிரசாரங்களுக்காக கருணாவின் கூற்றை பயன்படுத்தி வருகின்றது. இதற்கிடையில் கருணாவை தாம்தான் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரித்தெடுத்து, ஒரு உபாயமாக பயன்படுத்தினோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உற்ற நண்பருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார்.

ரணிலே தான்தான் அதனைச் செய்தேன் என்று கூறும்போது, ரணலின் கூட்டமைப்பு நண்பர்களால் அதனை மறுக்க முடியுமா? ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையிலான பேச்சு இடம்பெற்ற காலத்தில்தான், கருணா, விடுதலைப் புலிகள் தலைமைக்கு எதிரான கிளர்ச்சியில் ஈடுபட்டார். கிழக்கிற்கென்று தனியான புரிந்துணர்வு உடன்பாடு வேண்டுமென்று நோர்வே அரசாங்கத்திற்கு அறிவித்தார். இதன் காரணமாக விடுதலைப் புலிகள் அமைப்பிற்குள் வடக்கு, கிழக்கு என்னும் பிரிவு தோன்றியது. இறுதியில் விடுதலைப் புலிகள் அமைப்பு அதன் இராணுவ பலத்தை கணிசமாக இழந்தது. ஒரு புறம் விடுதலைப் புலிகளோடு சமாதானம் பேசிக் கொண்டே, மறுபுறத்தில் விடுதலைப் புலிகளை பிளவுபடுத்தி, அவர்களை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்தும் சதித்திட்டமொன்றையும் ரணில் வகுத்திருந்தார். 2001இலேயே அதனைத் தான் செய்தார் என்று அவரே கூறுகின்றார். அதாவது சமாதான பேச்சுக்களை ஆரம்பித்துக் கொண்டே, விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தும் திட்டமொன்றையும் முன்னெடுத்திருக்கிறார். அதன் விளைவுதான் கருணாவின் பிளவு. ஆனால், தமிழர்களின் ஒரு பகுதியோ இதற்கு பின்னால் இந்தியா இருப்பதான கற்பனையில் மூழ்கிக்கிடந்தது.

தென்னிலங்கை அரசியலில் ரணில் விக்கிரமசிங்கவை பொதுவாக நரி என்று வர்ணிப்பதுண்டு. ஏனெனில் அவர் அரசியலில் மிகவும் சாதுர்யமாக காய்களை நகர்த்தி, மற்றவர்களை தன் வலைக்குள் விழவைப்பதில் மிகவும் கைதேர்ந்தவர். அது அவரது பரம்பரை அரசியல் புத்தி.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் அவ்வாறானதொரு சாணக்கியத்தின் ஊடாகத்தான் இந்தியாவையும் விடுதலைப் புலிகளையும் மோதல் நிலைக்குள் தள்ளிவிட்டார். ஆனால் இதிலுள்ள ஆச்சரியம் என்னவென்றால், தமிழ்த் தேசியத் தலைமைகள் என்பவர்களோ எப்போதும் இப்படியான ஐக்கிய தேசியக் கட்சி - நரிகளை நம்பியே பயணித்திருக்கின்றனர். இப்போதும் பயணிக்கக் காத்திருக்கின்றனர்.

2015இல் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்திற்கு பின்னால், ரணிலின் நரிமூளையிருந்தது. தனது ஒரு அரசியல் எதிரியை வீழ்த்துவதற்காக ஏனைய எதிரிகளோடு கூட்டுச் சேர்ந்தார். உண்மையில் சந்திரிகாவிற்கும் ரணிலுக்கும் எப்போதுமே எட்டாப் பொருத்தம். சந்திரிகாவைப் பொறுத்தவரையில் ரணில் ஒரு ஆம்பிளையே அல்ல. ஆனாலும் ரணில் அனைவரோடும் இணைந்து பலமான எதிராளியான ராஜபக்சவை வீழ்த்தினார். இதற்காகக் கூட்டமைப்பை மிகவும் தந்திரமாகப் பயன்படுத்தினார். ஆனால் கூட்டமைப்பை கேட்டால், தாம்தான் ஆட்சி மாற்றத்திற்கு பெரிய பங்களிப்பை செய்ததாகக் கதையளப்பர். அப்படியாயின் ஆட்சி மாற்றத்தை கொண்டு ஏன் எதனையும் அடைய முடியவில்லையென்று கேட்டால் அதற்கு சம்பந்தனிடமோ அல்லது சுமந்திரனிடமோ உருப்படியான பதிலிருக்காது. சுற்றி வளைத்து மூக்கைத் தொடுவர். ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து, ரணில் - மிகவும் புத்தசாலித்தனமாக தனது அதிகாரத்தை உறுதிப்படுத்திக்கொண்டார். 19 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் தன்னை ஒரு பலமுள்ள பிரதமராக ஆக்கிக்கொண்டார். தனக்கு பிரச்னையேற்படும் போதேல்லாம் தன்னை பாதுகாப்பதற்கான அடியாட்களாக கூட்டமைப்பை பயன்படுத்தினார். மைத்திரியுடன் அதிகார மோதல் ஏற்பட்ட போதெல்லாம் கூட்டமைப்பைக் கொண்டு தன்னை பாதுகாத்தார். ஆனாலும் ரணிலைக் கொண்டு கூட்டமைப்பால் தமிழ் மக்களுக்காக எதனையும் சாதிக்க முடியவில்லை. அதுதான் ரணிலின் நரியரசியல்.

இன்று தான்தான் விடுதலைப் புலிகள் அமைப்பை பலவீனப்படுத்தியாக மிகவும் வெளிப்படையாகக் கூறுகின்றார். விடுதலைப் புலிகளுடன் பேசிக் கொண்டே, விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு திட்டம் வகுத்த ரணில், எவ்வாறு கூட்டமைப்புடன் உண்மையாக பேசியிருப்பார்.

# வடக்கு-கிழக்கில் வாக்குக் கேட்பதற்கு தேசியக் கட்சிகளுக்கு அருகதையில்லை

## வடக்கு அவைத் தலைவர் சிவஞானம் சொல்கிறார்



*யாழ்ப்பாணம், ஜூன் 26*

மிருசுவிலில் தமிழர்களைக் கொலை செய்த குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ அதிகாரிக்குப் பொது மன்னிப்பை வழங்கும் தென்னிலங்கைக் கட்சிகள்-

துப்பாக்கிகளைக்கூட கையில் ஏந்தாத ஆனந்த சுதாகரன் போன்ற தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க மறுத்துவரும் தேசியக் கட்சிகள் வடக்கு - கிழக்கில் தமிழர்களிடம் வாக்குக் கேட்பதற்கு அருகதை இல்லை என வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கில் தென்னிலங்கையைச் சேர்ந்த தேசியக் கட்சிகளின் அதிக்கம் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

மிசுருவில் பகுதியில் தமிழர்களை கொடூரமாக சித்திரவதை செய்து கொன்றொழித்த இரா ணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் ஊடாக அவர்களின் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டன. அவர்களுக்கு நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. எனினும் தண்டனை விதிக்கப்பட்டுச் சில காலங்களிலேயே சிறையில் இருந்த இராணுவ அதிகாரி ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். ஆனால் 25 வருடங்களுக்குமேலாக தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் மீது எவ்வித வழக்கு விசாரணைகள் இன்றியும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த ஆனந்த சுதாகரன் என்ற அரசியல் கைதியின் பிள்ளைகள் தாயை இழந்து அநாதரவாக இருக்கின்ற போதும் இன்று வரை தென்னிலங்கை அரசு அவரை விடுவிப்பதற்கு மறுத்து வருகின்றது. ஆனந்த சுதாகரனின் விடுதலையை தென்னிலங்கை தேசியக் கட்சிகள் கூட வலியுறுத்த அழுத்தம் கொடுக்க முன்வரவில்லை.

தமிழர்களுக்கு ஒரு நீதி இராணுவத்தினருக்கு ஒரு நீதி என்றே இந்த நாடு பயணிக்கின்றது. தமிழர்களின் இனப்பிரச்சினையில் கூட சிங்கள அரசு அக்கறையற்ற நிலைப்பாட்டிலேயே உள்ளது. கடந்த நல்லாட்சி அரசிலும் கூட இனப்பிரச்சினைக்குத் தீர்வாக புதிய அரசமைப்பு உருவாக்கம் இடம்பெற்றது. அந்தப் புதிய அரசமைப்பு பல தடைகளையும் தாண்டி நிறைவேற்றுவதற்கு தமிழர் தரப்புக்கள் முயற்சித்தபோதும் அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சியும் அந்தக் கட்சியைச் சேர்ந்த பிரதமரும் இதற்குத் தாங்கள் பொறுப்பில்லை என்று கைவிரித்துவிட்டார்கள்.

இவ்வாறு தமிழர்களின் அனைத்து விடயங்களிலும் காலை வாருகின்ற செயற்பாட்டைமுன்னெடுக்கும் தென்னிலங்கைத் தேசியக் கட்சிகள் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்பதற்கு அருகதை இல்லை-என்றார்.

# தேர்தல் நேரத்தில் திட்டமிட்டு களங்கம் ஏற்படுத்த முயற்சி

## மனோ கணேசன் காட்டம்



*கொழும்பு, ஜூன் 26*

முன்னாள் அரச கரும மொழிகள் அமைச்சரான மனோ கணேசன் மற்றும் அவரது பிரத்தியேகச் செயலாளர் ஆகியோருக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் இது குறித்து மனோ கணேசன் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

நல்லாட்சி அரசில் தேசிய மொழிப் பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்ற மோசடிகள் தொடர்பாக அதன் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ஹேரத் நேற்று முன் தினம் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடளித்திருந்தார்.

இந்நிலையில் தேர்தல் நேரத்தில் திட்டமிட்டுக் களங்கம் செய்கிறார்கள் என்றும் இந்த குற்றச்சாட்டுக்களை உடனடியாக விசாரணை செய்யுமாறும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் நேற்று வியாழக்கிழமை அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், ஆயிரத்து 300 இரண்டாம் மொழி பயிற்றுநர்களுக்கான நியமனங்கள், அன்றைய சபாநாயகர் கரு ஜயசூரிய, பிரதமர் ரணில் விக்ரமசிங்க, கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம், உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன ஆகியோரின் பங்குபற்றுதலுடன் அலரி மாளிகையில் கடந்த ஜூலை 10ஆம் திகதி வழங்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நியமனங்கள் அமைச்சரவைக்கு தன்னால் சமர்பிக்கப்பட்ட, அமைச்சரவைப் பத்திரத்துக்கு கிடைத்த ஒப்புதலின் அடிப்படையி லேயே வழங்கப்பட்டதாகவும் அன்றைய கல்வி அமைச்சரும், நிதி அமைச்சரும் விசேட ஒப்புதல்களை வழங்கியிருந்தனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தனது அமைச்சின் கீழ்வந்த, தேசிய மொழி மற்றும் கல்வி பயிற்சி நிறுவனத்தின் தலைவர் தென்னக்கோன் மற்றும் இப்போது தன் மீது குற்றம் சுமத்தும் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ஹேரத் ஆகியோரே அந்த நிகழ்வை அலரி மாளிகை மண்டபத்தில் நடத்தினார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பிரசாத் ஹேரத் இல்லாதபோது, இவரது அலுவலகத்துக்குச் சென்று, அவரது கையெழுத்தைத் தயாரித்து நியமனதாரிகளுக்கு பகிர்ந்தளித்தாக என்மீது குற்றம் சாட்டுவது அரசியல் காரணங்களுக்காக இட்டுக்கட்டிய பொய் என மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறிருக்கையில், தன் மீது அநியாய குற்றச்சாட்டுகளை ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் சுமத்திவிட்டு, வெளியே வந்து 'தமிழ் மக்களுக்காக முன்னிலையாவதாகக் கூறி அமைச்சர் மனோ கணேசன் இனவாதச் செயல்களையே முன்னெடுத்தார்' எனக் கூறியதன் மூலம் பிரசாத் ஹேரத்தின் உண்மையான நோக்கம் என்னவென்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார் என அவர் மேலும் கூறியுள்ளார்.

செய்திகள்

# காஞ்சிரமோட்டை மக்களின் மீள்குடியேற்றத்துக்குத் தடை

## வனவள திணைக்களம் மீது குற்றச்சாட்டு



வவுனியா, ஜூன் 26

காஞ்சிரமோட்டை கிராம மக்களின் மீள்குடியேற்றத்துக்கு வனவளத் திணைக்கள அதிகாரிகள் முட்டுக்கட்டை போடுகின்றனர் எனத் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலாளரும் அந்தக் கூட்டணியின் வன்னி மாவட்ட தலைமை வேட்பாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் வனவள அதிகாரிகளின் இத்தகைய நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி உடன் நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட காஞ்சிரமோட்டை மற்றும் நாவலர் கிராம மக்கள் அனைவரும் தாங்கள் மீளக்குடியமர வனவள அதிகாரிகள் தடையாக இருப்பதாக தெரிவித்து 21.06.20 முதல் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்து வருகின்றனர்.

காஞ்சிரமோட்டை மற்றும் நாவலர் கிராமம் ஆகிய இரு கிராமங்களும் தமிழ் மக்கள் பூவீகமாக வாழ்ந்து வரும் கிராமங்களாகும்.

இந்தக் கிராமத்தில் 1947ஆம் ஆண்டில் இருந்து அந்த மக்கள் வசித்து வருகின்றார்கள்.

இப்பகுதி மக்கள் பல தடவைகளுக்கு மேல் இடம்பெயர்ந்து மீள்குடியேற்றம் செய்யப்பட்டு இரண்டரை வருடங்கள் கடந்துள்ள நிலையில் அக் கிராம மக்களுக்கான அடிப்படை வசதிகள் எவையும் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை.

குறிப்பாக, கைவிடப்பட்ட தமது காணிகளில் வாழ்வாதாரத்துக்காகப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கும் வனவள திணைக்கள அதிகாரிகள் தடைபோட்டு வருகின்றனர்.

அதுமட்டுமன்றி அவர்கள் தமது சொந்த நிலங்களில் வாழ்வாதார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு எதிராக நீதிமன்றத்தில் அந்த மக்களை நிறுத்துவதற்கான முயற்சிகளை வனவளத் திணைக்கள அதிகாரிகள் முன்னெடுக்கின்றனர்.

கிராம மக்களுக்கான வீதி புனரமைப்பு மற்றும் கிராமத்துக்கான மின் இணைப்பு ஆகியவற்றை வனவளத் திணைக்களத்தினர் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இந்தக் கிராம மக்களின் மீள்குடியேற்றத்தை வனவள துறையினர் தடுக்கக்கூடாது என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் முறையாக நிறைவேற்றப்பட்டுள்ளபோதும் அந்தத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்த வனவள திணைக்களம் தடுக்கிறது.

யுத்த காலத்தில் பல இழப்புக்களைச் சந்தித்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறி தமது காணிகளில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கும் காணிகளைத் துப்பரவு செய்வதற்கும் அவர்களுக்கான வீதி புனரமைப்பு மற்றும் மின் இணைப்பு போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டியுள்ள நிலையில் வனவள திணைக்களத்தினரின் இத்தகைய செயற்பாடுகள் மனிதாபிமானத்தினை குழிதோண்டி புதைத்து அதிகார மிலேச்சத்தனத்தினையே வெளிப்படுத்துவதாக உள்ளது.

ஆகவே அதிகாரிகளின் இவ்விதமான முறையற்ற நடவடிக்கைகள் தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் உரிய அமைச்சர்கள், அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டியபோதும் அவை பராமுகமாக இருந்து வருவதால் ஜனாதிபதி உடனடியாக இந்த விடயத்தில் தலையீடு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்- என்றுள்ளது.

# மாமனிதர் ரவிராஜ் ஜனன தினம் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிப்பு







யாழ்ப்பாணம், ஜூன் 26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் மாமனிதர் ரவிராஜின் 58 ஆவது ஜனன தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு முன்பாக உள்ள அவரது சிலையில் இந்த நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மறைந்த மாமனிதர் ரவிராஜின் மனைவி சசிகலா ரவிராஜின் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

இந்த அஞ்சலி நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சயந்தன், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# யாழில் 22 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 26

தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து நேற்று வரை ஒரு தேர்தல் வன்முறைச் சம்பவம் உட்பட 22தேர்தல் விதி முறைகள் மீறல் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் கி. அமலராஜ் தெரிவித்தார்.

இவற்றில் பெரும்பாலான முறைப்பாடுகள் தேர்தல் சட்ட விதிகளை மீறியதற்கான முறைப்பாடுகள். ஒரேயொரு தேர்தல் வன்முறை சம்பவம் பதிவாகியுள்ளது அது அண்மையில் தென்மராட்சியில் இடம்பெற்ற தனியார் ஊடக நிறுவனம் ஒன்றின் மீதான தாக்குதல் சம்பவமாகும்.

# கருணாவுக்கு வக்காலத்து வாங்கும் அரசு அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும்

## கோருகின்றார் சுரேஷ் பிறேமச்சந்திரன்



யாழ்ப்பாணம், ஜூன் 26

“விடுதலைப் புலிகளின் தளதிகளைப் பாதுகாத்து அவர்களுக்காக வக்காலத்து வாங்கும் அரசு, மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட இராணுவத்துக்கு பொது மன்னிப்பளித்த அரசு 15 வருடங்களுக்கு மேலாகச் சிறையில் வாடும் அரசியல் கைதிகளைத் தொடர்ந்தும் கால இழுத்தடிப்புச் செய்யாமல் விடுதலை செய்யவேண்டும்.”

-இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப் பேச்சாளர் சுரேஷ் பிறேமச்சந்திரன்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

சில நாட்களுக்கு முன்பு கருணா அம்மான் ஓர் கூட்டத்தில் பேசுகின்ற பொழுது, தான் கொரோனா வைரைஸிலும் விடப் பயங்கரமானவன் என்றும் ஆனையிறவு போன்ற தாக்குதல்களில் 3000 ற்கும் மேற்பட்ட இராணுவத்தினரைக் கொலை செய்தேன் என்றும்,பெருமை பேசிக் கொண்டார்.

உடனடியாகவே எதிர்க்கட்சிகள் மற்றும் சிங்கள பௌத்த இனவாதக் குழுக்கள் கருணாவின் பெருமைமிகு கருத்துக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தத் தொடங்கின.

ஆனால் ஆளும் கட்சியினர் அவருக்காக வக்காலத்து வாங்கினர். கருணாவின் தகவல்களைக் கொண்டே புலிகளை அழித்ததாகவும்,அவர் காப்பாற்றப்படவேண்டியவர் எனவும் ஆளும் தரப்பில் இருக்கக் கூடிய பலர் குரல் கொடுத்து வருகின்றனர்.

கருணாவின் வரலாறு இரகசியமானதல்ல என்று பிரதமரும்,எதிர் எதிர்க் கட்சியினருக்கு பதிலடிகொடுத்துள்ளார். ஏற்கனவே கருணா என்பவர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவராகவும்,பிரதி அமைச்சராகவும் மஹிந்த தரப்பினரால் அழகுபார்க்கப்பட்டவர் தான். அதுமாத்திரமல்ல , விடுதலைப் புலிகளுக்குத் தேவையான ஆயுதங்களைக் கொள்வனவு செய்து வந்த கே.பி. என்பவருக்கும் தேவைக்கு மேலதிகமாகச் சலுகைகள் அனைத்தும் வழங்கப்பட்டு அவரும் இன்றுவரை அரசினால் பராமரித்து வரப்படுகின்றார்.

உங்களது தேவைக்கேற்ப நீதியை உங்களால் வாங்கமுடியுமாக இருந்தால் சிறையில் இருக்கும் கைதிகளை விடுவிப்பதில் ஏன் தாமதம் காட்டுகின்றீர்கள்? சிலர் பாரதூரமான குற்றங்களைச் செய்திருக்கிறார்கள். அவர்களை விடுவிக்கமுடியாது,ஏனையோரைப்பற்றி சட்டமாஅதிபர் திணைக்களம் ஒப்புதல் தரவேண்டும் போன்ற பல சாட்டுக்களை கடந்த பத்து வருடங்களாக கூறி வருகின்றீர்கள். இவர்கள் யாரும் தாமாக விரும்பி வன்முறையில் ஈடுபட்டவர்களல்லர். அவர்களை வழி நடத்தியவர்களில் உத்தரவுகளைச் செயற்படுத்தியவர்களே அவர்கள். உங்கள் பார்வையில் அவர்கள் குற்றமிழைத்ததாக கருதப்பட்டாலும் தமது மக்களின் உரிமைகளுக்காகவே செயற்பட்டனர். -என்றார்.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்



7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : காலைக்கதிரொளி
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பெண் பூவே
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
**பகல்**
1.00 மணி : பத்துக்கு பத்து
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
அதர்வா மற்றும் மேகா ஆகாஸ் நடித்த பூமராங்




வருண் மற்றும் சம்யுக்தா நடித்த பப்பி

திரைப்படங்களில் இருந்து காட்சிகள்
4.30 மணி : இப்படியும் பாடலாம்
5.00 மணி : சினிமா சினிமா
6.00 மணி : மைதானம்
**இரவு**
7.00 மணி : கொஃபி வித் பிரமுகர்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கவிதைகள் சொல்லவா
10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN VISION HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
12.00 மணி : ராஜா ராணி
**பகல்**
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு துாங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - கணிதம்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - தமிழ்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) வரலாறு
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
**பகல்**
12.00 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தமிழ்
**இரவு**
7.00 மணி : க.பொ.த உயர்தரம் வணிகப்பிரிவு மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சிவபுராணம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : சின்மய சிந்தனை
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா 01
10.00 மணி : நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய உற்சவ நேரலை



12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா 02
6.00 மணி : நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய மாலை உற்சவ நேரலை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
12.00 மணி : புனித மிக்கேல் மன்றாட்டு
**பகல்**
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : நிதர்சனம்
4.30 மணி : மட்டக்களப்பு திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்
**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : இஸ்லாமிய உலகம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்

செய்திகள்

# கறிவேப்பிலையாக மட்டுமே கருணாவை நாம் பாவித்தோம்

## பதவியெதுவும் கொடுக்கவில்லை என்கிறார் ரணில்



கொழும்பு, ஜூன் 26

போர் நிறுத்த காலப் பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து கருணா அம்மானைப் பிரித்தெடுத்து, புலிகளுக்கு எதிரான யுத்தத் துக்கு உபாய முறையாக மட்டுமே பயன்படுத்தினோம். அதற்காக அவருக்குக் கட்சியில் உப தவிசாளர் பதவியையோ அமைச்சுப் பதவியையோ வழங்கவில்லை என ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி முக்கிய உறுப்பினர்கள் பலர் இன்று தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை அவரது இல்லத்தில் சந்தித்து தேர்தல் பிரசார நடவடிக்கைகள் உள்ளிட்ட சமகால அரசியல் விவகாரங்கள் குறித்து கலந்துரையாடினர்.

இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் கூறுகையில்,

ஒரிரவில் மூவாயிரம் படையினரைக் கொன்று குவித்தார் எனக் கருணா அம்மான் குறிப்பிட்டுள்ளார். அரசைப் பாதுகாக்கவே இவ்வாறானதொரு கருத்தைத் தெரிவித்துள்ளார். இதனால் இராணுவக் குடும்பங்கள் குழப்பமடைந்துள்ளன.

2001 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தத்தின்போது விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து கருணா அம்மானை பிரித்தெடுத்தோம். இதன் பின்னர் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்காகக் கருணாவை உபாய முறையாக பயன்படுத்தினோம்.

அதற்காக அவருக்கு ஐக்கிய தேசியக் கட்சியில் உப தவிசாளர் பதவியினையோ அமைச்சுப் பதவியினையோ வழங்கி உள்வாங்க வில்லை - என்றார்.



# யாழ்.நகரப் பாடசாலைகளில் கிருமி நீக்கம் தொடர்கின்றது

யாழ்ப்பாணம், ஜூன் 26

பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் பாடசாலை வளாகத்தில் கிருமித் தொற்று நீக்கும் பணிகள் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் இரண்டாவது நாளாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று கிருமித் தொற்று நீக்கும் செயற்பாடுகள் விசேட அதிரடிப்படையினரால் முன்னெடுக்கப்பட்டன.

எதிர்வரும் 29 ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் இந்த வேலை திட்டமானது நேற்று முன்னெடுக்கப்பட்டது.

# இராணுவச் சாவடி மீது வாகனம் மோதி விபத்து!



மன்னார், ஜூன் 26

இராணுவ சோதனைச் சாவடி மீது மன்னார் நகர சபைக்கு சொந்தமான கழிவு அகற்றும் பௌசர் மோதி விபத்து இடம்பெற்றது.

மன்னார் பிரதான பாலத்திற்கு அருகே நேற்று மதியம் இடம்பெற்ற இந்த விபத்தில் தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை.

கழிவுகளை சேகரித்த பௌசர் வாகனம் அதை மீள் சுழற்சி நிலையத்துக்கு கொண்டு செல்லும்போது பழுதடைந்த வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்த பாலத்திற்கு அருகில் உள்ள சோதனை சாவடி மீது மோதியது.

இராணுவ வீதித் தடைகள் தூக்கி வீசப்பட்டதுடன், சோதனை சாவடியில் வாகனங்கள் பதிவு செய்யப்படும் பகுதி முழுமையாகச் சேதம் அடைந்தது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தனியார் கல்வி நிறுவன வகுப்புக்களில் 100 பேருக்கு மேல் அனுமதிக்கலாமா?

## ஜனாதிபதி ஆலோசனை

கொழும்பு, ஜூன் 26

தனியார் கல்வி நிறுவனங்களில் 100 இற்கும் அதிக மாணவர்களை வகுப்பறையில் அனுமதிக்கலாமா என்பதை பரிசீலனை செய்யுமாறு சுகா தார அமைச்சர் பவித்ரா வன்னிராச்சிக்கு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

கொரோனா தடுப்ப நடவடிக்கையாகத் தனியார் வகுப்புக்களில் 100 இற்கும் குறைந்த மாணவர்களையே இணைத்துக் கொள்ள முடியுமென சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனில் ஜாசிங்க வெளியிட்ட வழிகாட்டல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

முக்கிய நகரங்களில் உள்ள தனியார் கல்வி நிலையங்களில் ஒரு வகுப்பில் 1000 இற்கும் அதிக மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். நீண்ட விடுமுறையால் மாணவர்களின் கற்றல் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வகுப்பறையில் மாணவர்களை மட்டுப்படுத்துவது மாணவர்களின் கல்வியை பாதிக்குமெனக் கல்வியமைச்சுக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து, ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

அத்துடன், அரசியல் கட்சிகளின் கூட்டங்களில் 500 வரையான பொதுமக்களை அனுமதிக்கலாமா என்பது பற்றியும் ஆலோசனை கோரியுள்ளார்.

# கரன்னகொட மீதான விசாரணையை நிறுத்த உத்தரவு!



கொழும்பு, ஜூன் 26

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொடவுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகளால் முன்னெடுப்படும் வழக்கு விசாரணையை இடைநிறுத்துமாறு உயர் நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

# இலங்கையில் மீண்டும் கொரோனா அபாயம்!

## அரச வைத்தியர்கள் சங்கம் எச்சரிக்கை

இலங்கையில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவும் அபாயம் உள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் தற்போது கொரோனா வைரஸின் தாக்கம் குறைவடைந்து வருகின்றமையால், வெளிநாடுகளில் இருந்து வருபவர்களை உரிய முறையில் கவனிக்க வேண்டுமென அந்தச் சங்கத்தின் தலைவர் வைத்தியர் அனுருத்த பாதெனிய தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டதன் பின்னர், வெளியில் நடமாடும் சமயங்களில் மீண்டும் சந்தேகத்திற்கு இடமான அறிகுறிகள் காணப்பட்டால், அவர்களை மீண்டும் பரிசோதனை செய்ய வேண்டும் என அவர் மேலும் கூறினார்.

இலங்கையில் கொரோனா வைரஸ் காரணமாக இதுவரையில் 2007 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதுடன், 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக மீண்டும் தேவநேசன்

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ் பிராந்திய பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்தியர் ஆ.தேவநேசன் மீள நியமிக்கப்பட்டுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலையீட்டை தொடர்ந்து, வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர், இதற்கான நியம ணனக் கடிதத்தை வழங்கியிருந்தார்.

யாழ்.பிராந்திய பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.தேவநேசன் அண்மையில், ஊர்காவற்றுறை வைத்தியசாலைப் பணிப்பாளராக இடமாற்றப்பட்டார்.

வடக்கு சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குள் சில காலமாக நிலவிய பனிப்போரின் விளைவாக இந்த இடமாற்றம் நிகழ்ந்ததாகக் கருதப்பட்டது. கொரோனா தடுப்பு நடவடிக்கையில் போதிய ஒத்துழைப்பை அவர் வழங்கவில்லையென குறிப்பிடப்பட்டு செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து, அவர் இடமாற்றப்பட்டிருந்தார்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் இந்த இடமாற்றம் நிகழ்ந்தது.

தேர்தல் காலத்தில் இடமாற்றம் செய்ய முடியாதென்ற விதிமுறையை மீறி இடம்பெற்ற இந்த இடமாற்றத்திற்கு எதிராக வைத்தியர் ஆ.தேவநேசன் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு முறையிட்டார்.

இதையடுத்து இந்த விடயத்தில் தலையிட்ட தேர்தல்கள் ஆணைக்குழு, விதிமுறையை மீறி இடம்பெற்ற தேவநேசனின் இடமாற்றத்தை இரத்து செய்தது. இதற்கான அறிவித்தல் சில வாரங்களுக்கு முன்னரே வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டது. எனினும், இதில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமலிருந்தது.

இந்த நிலையில் நேற்று யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக நியமிக்கப்படும் கடிதம் வைத்தியர் ஆ.தேவநேசனுக்கு, வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் அனுப்பி வைக்கப்பட்டது.

பாகம் – 27

தயாளன்

# கூட்டமைப்பின் உருவாக்கம் எப்படி நிகழ்ந்தது?

பாஷையூரைச் சேர்ந்த லோங்கன் முதலானோர் இந்தப் படு கொலைகளை நிகழ்த்தினர். “மண்டையன் குழு” என இவர்கள் மக்களால் குறிப்பிடப்பட்டனர். ஏழாலை - குப்பிளான் பகுதியில் புலிகள் உறுப்பினர் லோலோக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இருந்தது. இவர் இந்தியப் படையினர் மீது பல தாக்குதல்களை நடத்தி வந்தார். ஒரு வீட்டுக்குப் புலிகள் உறுப்பினர் போலச்சென்ற ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர் “லோலோ அண்ணை சாப்பாட்டுப் பார்சல் வாங்கிவரச் சொன்னார்” என்று அந்தக் குடும்பத் தலைவியிடம் கூறினர். அந்த வீட்டில் சமையல் முழுமையாக முடியவில்லை. வேலிக்குள்ளால் அடுத்த வீட்டுப் பெண்மணியிடம் சொன்னார் அவர். அந்த வீட்டிலும் அதே நிலைதான். அங்கே காய்ச்சி முடிந்த கறியைக் கொண்டுவந்து இரு வீட்டுச் சமையலும் சேர்ந்த உணவுப்பொதிகளைக் கட்டினர். ஒரு பையில் போட்டு இவர்களிடம் கொடுத்ததும் இரு பெண்களையும் சுட்டுக்கொன்று விட்டு உணவுப் பொதிகளுடன் சென்றனர் ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர்.

**காணாமல் போன முஸ்லிம் யுவதி!**

மட்டக்களப்பில் நிலைமை இன்னும் மோசமாக இருந்தது. நகரின் காந்தி சிலைக்கு அண்மையில் சைக்கிள் வாங்கச் சென்றனர் காத்தான்குடியைச் சேர்ந்த ரிபாயா, அரசடியைச் சேர்ந்த சுகுணா ஆகியோர். அந்தக் கடை வாசலில் இவர்களைக் கண்ட (தற்போதைய கிழக்கு மாகாண சபை உறுப்பினர்) இரா.துரைரத்தினம் ஒரு விசாரணை இருப்பதாகவும் தங்கள் முகாமுக்கு தங்களுடன் காரில் வர வேண்டும் எனவும் சொன்னார். இவர்கள் “தாங்கள் நடந்து வருவதாகச் சொன்னார்கள்” இரா.துரைரத்தினமும் இன்னும் ஒருவரும் இவர்களுடன் சேர்ந்து நடந்து வாவிக்கரை வீதியில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ் முகாமுக்குச் சென்றனர். (இந்த முகாம் தற்போது ஈ.பி.ஆர்.எல்.எவ்வினரின் பணிமனையாகப் விளங்குகிறது.) அங்கு போனவுடனேயே சுதந்திர பறவைகளில் ஒன்றைக் கொண்டுவந்துள்ளதாக தொலைபேசி மூலம் யாருக்கோ தகவல் அனுப்பப்பட்டது. இவர்கள் இருவரும் சித்திரவதைக்கு உள்ளானார்கள். இவர்களை ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர் கொண்டு சென்ற விடயம் பிரஜைகள் குழுப் பிரமுகர் வண. பிதா சந்திரா பெர்னாண்டோ அவர்களுக்குப் தெரிவிக்கப்பட்டது.

அவர் இந்தியப் படையின் அதிகாரிகளுடன் வந்து சேர்ந்த போது சுகுணா மயக்க நிலையில் காணப்பட்டார். ரிபாயாவைக் காணவில்லை. இன்று வரை அந்த மர்மம் துலங்கவில்லை. இவ் விடயத்தில் இந்தியப் படையினருடன் தொடர்பு கொண்ட வண. பிதா சந்திரா பெர்னாண்டோ 06.06.1988 அன்று மட்டக்களப்பு மத்திய வீதியில் அமைந்துள்ள மாதா தேவாலயத்தினுள் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட சுகுணா என்பவர் கண்ணன்/மயூரன் (சீனித்தம்பி ஜீவராஜ்) என்பவரின் சகோதரி.14.11.1990 அன்று புலிகளின் பயிற்சி முகாமில் ஏற்பட்ட விபத்தில் கண்ணன் உயிரிழந்தார். இக் காலகட்டத்தில் சுகுணாவும் இயக்கத்தில் இணையும் சூழ்நிலை ஏற்பட்டது. ஈ.பி.ஆர்.எல்.எவ். மீண்டும் மட்டக்களப்பில் அரச படைகளுடன் இணைந்து இயக்கத் தொடக்கி விட்டதால் வேறு வழி இருக்கவில்லை. இவருக்கு வாஸந்தி பெயர் சூட்டிடப்பட்டது. பெண்கள் புனர்வாழ்வு நிறுவனப் பணிகளில் இவர் தீவிரமாக உழைத்தார்.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு கிளைச் செயலர் சௌந்தரராஜன் ஈரோஸ் சார்பாக 1989 பொதுத் தேர்தலில் போட்டியிட்டார். இவருக்கு ஆதரவாக இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் D.S. வணசிங்கா செயற்பட்டார்,. இவர் 31 .03.1989 அன்று வெயிலி வீதி அரசடியில் உள்ள தனது வீட்டில் வைத்து ஈ. பி.ஆர்.எல்.எவ்வினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அப்போது ஈ.பி.ஆர்.எல்.எவ்வை வழிநடத்திய இரா. துரைரத்தினமும், ஆசிரியர் சௌந்தரராஜனும் இணைந்து ஒரே கட்சியில் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டனர். 13.05.1988 அன்று பாடசாலை அதிபரும், மக்கள் குழுத் தலைவருமான மாசிலாமணி கனகரத்தினம் (ஆரையம்பதி) ஈ. பி. ஆர். எல்.எவ்வினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதன்பின் மக்கள் குழுத் தலைவராக விளங்கிய கணபதிப்பிள்ளை அதிபரும் (ஆரையம்பதி) ஈ. பி. ஆர். எல்.எவ்வினராலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொம்மாதுறையைச் சேர்ந்த தேவி


துரைரத்தினம்

சுதன் (கிராம அலுவலர்), சத்தியன் (மாணவன்) ஆகிய இருவரும் ஈ.பி.ஆர்.எல். எவ். உறுப்பினர் சந்துருவினால் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டார்கள். ஏற்கெனவே களுதாவளையைச் சேர்ந்த முத்துலிங்கம் என்பவரும் ஈ.பி.ஆர் .எல் எவ்வினரால் படுகொலை செய்யப்பட்டார்.

புலிகளைப் பொறுத்த வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்துக்கான பணிகளை ஒருங்கிணைப்பதற்கான பொறுப்புக்களைச் சிவராமிடம் ஒப்படைத்தமை ஒரு அரசியல் ரீதியான முன்னெடுப்பு. இதனை விட ஏனைய இயக்கங்களைக் கையாள்வதற்கெனச் சில உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆரம்பத்தில் மாதவன் மாஸ்டர் என்பவரிடம் இப் பொறுப்புக் கையளிக்கப்பட்டிருந்தது. தமக்குச் சாதகமாக நிலைமைகளை உருவாக்குவதே இவர்களது பொறுப்பு. ஈ.பி.ஆர்.எல்.எவ்வைக் கையாள வவுனியாவிலுள்ள அதன் முக்கியஸ்தர் ஒருவர் மூலம் தொடர்பு கொண்டனர். தமிழன்பன் போன்றோர் இவ்வாறான பணிகளை மேற்கொண்டனர். ஆபத்தான இடங்களில் பயணம் செய்து இவ்வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.


லோலோ

இதில் உயிர் இழப்புக்களும் ஏற்பட்டன. சிவராமின் முயற்சிகள் கனிந்து வரும் வேளை டெலோவினர் புலிகளை மட்டக்களப்பில் சந்தித்தனர்.

**ஜனா, இரா.துரைரத்தினம் விடயத்தில். இறுக்கமாக இருந்த புலிகள்!**

ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், பிரசன்னாஆகியோர் கொக்கட்டிச்சோலையில் கரிகாலன், சிறப்புத் தளபதி ரமேஷ் முதலான புலிகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினர். சண், தவராஜா என்ற ஊடகவியலாளர் செல்வத்தின் செயலர் என்றோ உதவியாளர் என்றோ ஏதோ ஒரு விதத்தில் கலந்து கொண்டார். நடேசன், தராக்கி ஆகிய பத்திரிகையாளர்களும் பாக்கிய செல்வம் அரியநேத்திரன் ஆகியோரும் அங்கு சென்றிருந்தனர். அவசரகாலச்


ஜனா

சட்ட நீடிப்பை எதிர்த்து வாக்களித்தமையால் மட்டக்களப்பில் இருந்த புலிகளுக்கும் அவர்கள் மீது நல்லபிப்பிராயம் ஏற்கெனவே ஏற்பட்டிருந்தது.

சுமுகமான முறையில் நடைபெற்ற இப்பேச்சில் எக்காலத்திலும் ஜனாவை ( கோவிந்தன் கருணாகரன்) வேட்பாளராக நிறுத்தக் கூடாது. என்பதை வலியுறுத் தக் கரிகாலன் தவறவில்லை. அதேபோல் அடுத்து நடைபெற்ற சுரேஷ் பிரேமச் சந்திரனுடனான சந்திப்பில் இரா. துரைரத்தினத்தை வேட்பாளராக நிறுத்தக்கூடாது என்ற விடயம் வலியுறுத்தப்பட்டது. எல்லாவற்றுக்கும் தலையாட்டினார் சுரேஷ் பிரேமச்சந்திரன். எனினும் இறுதி யுத்தத்தின் பின் 2010 தேர்தலில் புலிகள் சார்பானோரை வேட்பாளர் பட்டியலிலிருந்து நீக்கியமையை நியாயப்படுத்தியிருந்தார்.

வெளிநாட்டிலிருந்தோர், அரசுடன் இணைந்து செயல்பட்டோர் ஆகியோரைத் தவிர ஏனையோருக்கு வேட்பாளர் பட்டியலில் இடம் வழங்கப்பட்டுள்ளதாக பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார். ஜெயானந்தமூர்த்தி , கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், போன்றோரின் கடவுச் சீட்டுகளுடன் இவரதும் , சம்பந்தன் ஐயா, மாவை , செல்வம் போன்றோரினதும் கடவுச் சீட்டுக்களை ஒப்பிட்டிருந்தால் உண்மை புரிந்திருக்கும். அத்துடன் எந்த நாட்டுக்குமே போகாத சொலமன் சூ சிறிலையும் இந்தப் பட்டியலுக்குள் கொண்டுவந்து விட்டார். புலிகளின் தீர்மானத்துக்கு மாறாக இரா. துரைரத்தினத்தை மீண்டும் கட்சிக்குள் கொண்டு வந்து விட்டார். அதே போல் ரெலோ செல்வமும் ஜனாவை மீண்டும் தமது கட்சிக்குள் கொண்டுவந்து விட்டார். 2009 இறுதி யுத்தம் முடிந்ததும் மட்டக்களப்பில் வெடி கொளுத்தி மகிழ்ந்தவர் இரா. துரைரத்தினம். 2011 மாமனிதர் என்ற கௌரவத்துடன் ஜோசப் பரராஜசிங்கத்தின் நினைவு நிகழ்வை நடத்துவதை ஆட்சேபித்தவர். மாமனிதர் என்பதெல்லாம் முடிந்து போன கதை என்பது இவரது வாதம்.

**போராட்டத்தைப் பயங்கரவாதம் என வர்ணித்த தமிழ் எம்.பி !**

ரெலோ மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வுடனான சந்திப்புக்களின்போது சமுகமளித்திருந்த ஒருவர் நாடாளுமன்றத்தில் 09.06.2011 அன்று விலங்குகள் தொடர்பான சட்ட மூலத்தில் உரையாற்றியபோது “பயங்கரவாதத்தை அழித்த இந்த அரசாங்கத்துக்கு விசர் நாய்களைக் கொல்வது என்பது கடினமான செயல் அல்ல” எனக் குறிப்பிட்டதாக ஹன்சாட்டில் பிரசுரமாகியுள்ளது. மற்றொருவர் தமிழகத்தில் ஈழத்தின் பிரபல அரசியல் ஆய்வாளராக இருந்த ஒருவரைச் சந்தித்தார். அப்போது அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக இவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது “ இவங்கள் கொஞ்சக் காலம் உள்ளுக்க இருக்கட்டும். வெளியில வந்தால் அரசியலக் குழப்பிப் போடுவாங்கள் “ எனப் பதிலளித்தார் இவர். தற்போது புலிகள் களத்தில் இல்லாததால் எல்லோருமே தமது முக மூடிகளைக் கழற்றி விட்டனர்.

● ● ●

**வரலாற்றைத் திரிபுபடுத்தும் ஊடகவியலாளர்கள்!**

இக்கட்டுரைத் தொடரின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல தவறான புரிதல் ஒன்று புலம்பெயர் தமிழர்களிடையே உள்ளது. ஒருவர் கருணா ஒரு துரோகி என்பதைச் சொன்னாலே போதும் அவர் ஒரு தேசியவாதி. அதன் பின்னால் மறைமுகமாகப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவத்தைக் கண்டுகொள்ள மாட்டார்கள். வரலாற்றைத் திரிபு படுத்துவத்தைக் கவனிக்கவே மாட்டார்கள்.

முக்கியமான ஒரு விடயம் - கருணா தலைமைக்குத் தெரியாமல் வன்னியிலிருந்து தனது படையணிகளை மட்டக்களப்புக்குக் கொண்டு சென்றார் என்று நிறுவ முயன்றார் நிராஜ் டேவிட் என்ற ஊடகவியலாளர். பார்ப்பவர்களை இப்படியெல்லாம் துரோகம் செய்தாரா கருணா? என்ற சிந்தனையில் ஆழ்த்தினார். வரலாற்றைத் திரிபுபடுத்துவத்தை எவரும் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. தமிழரின் ஆறாவது அறிவைக் கேள்விக்குள்ளாக்கும் விடயம் இது.

கருணா துரோகிதான்! அதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் ஆயிரக்கணக்கான வீரர்களைக் கொண்ட படையணியைப் பிரபாகரனுக்குத் தெரியாமல் நகர்த்த முடியுமா? பொட்டம்மான் தலைமையிலான புலனாய்வுப் பிரிவு இப்படி நடக்கப் போகிறது என்று பிரபாகரனுக்குத் தகவல் அனுப்பவில்லையா? என்றெல்லாம் கேள்வி வருமே - புலிகளின் தலைமையைப் பற்றிய நிராஜின் கணிப்பு என்ன? (நாளையும் வரும்)

உலகச் செய்திகள்

# கொரோனா வைரஸ் தடுப்பு மருந்து மனிதர்களில் சோதனை ஆரம்பம்



லண்டன், ஜூன் 26

பிரிட்டனில் உருவாக்கப்பட்ட கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தை மனிதர்களுக்கு கொடுத்துப் பரிசோதிக்கும் பணி தொடங்கியது.

இந்த மருந்தை தங்கள் உடலில் செலுத்தி பரிசோதனைக்கு உட்படுத்திக்கொள்ள விரும் பும் தன்னார்வலர்களுக்கு மருந்து செலுத்துவது தொடங்கி விட்டது. அடுத்த சில வாரங்களில் 300 பேர்களுக்கு இந்த மருந்து செலுத்தப்படும். லண்டன் இம்பீரியல் கல்லூரிப் பேராசிரியர் ரொபின் ஷட்டாக் குழுவினர் இந்தப் பரிசோதனையை நடத்துகிறார்கள்.

முன்னதாக விலங்குகளிடம் நடத்தப்பட்ட பரிசோதனையில் இந்த தடுப்பு மருந்து பாதுகாப்பானது என்றும், பயனுள்ள வகையில் நோய் எதிர்ப்பு எதிர்வினையைத் தூண்டுவதும் கண்டுபிடிக்கப் பட்டது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழக வல்லுநர்கள் ஏற்கெனவே மனிதர்களிடம் பரிசோதனையைத் தொடங்கிவிட்டனர்.

இதுதவிர, கொரோனாவுக்கு உலகின் பல இடங்களில் இது போல தனித்தனியாக சுமார் 120 தடுப்பு மருந்து ஆராய்ச்சித் திட்டங்கள் நடந்து வருகின்றன.

நிதிதுறையில் பணியாற்றும் 39 வயது கேத்தி என்பவர் இந்த தடுப்பு மருந்தை முதலில் ஏற்றி பரிசோதனைக்கு உட்படுத்திக்கொள்ள முன் வந்தவர்களில் ஒருவர். கொரோனா வைரஸுக்கு எதிரான போராட்டத்தில் பங்காற்றவேண்டும் என்பதற்காகவே இந்த பரிசோதனைக்கு முன்வந்ததாக அவர் குறிப்பிட்டார்.

இந்த முதல் கட்டப் பரிசோதனையில் அடுத்ததாக ஒக்டோபர் மாதம் 6 ஆயிரம் பேருக்கு இந்த மருந்து செலுத்தி பரிசோதனை நடத்தப்படும்.

பிரிட்டனிலும் பிற நாடுகளிலும் இந்த தடுப்பு மருந்து 2021 தொடக்கத்தில் கிடைக்கும் என்கிறது இம்பீரியல் கல்லூரி ஆய்வுக் குழு.



# ஒரே இரவில் கோடீஸ்வரர்!

டுடுமா, ஜூன் 26

தன்சானியாவில் சிறிய அளவிலான சுரங்கத் தொழிலாளி ஒருவர் ஒரே இரவில் பல கோடிகளுக்கு அதிபதியாக மாறியுள்ளார். இரு பெரிய "தன்சனைட்" கற்களை விற்பனை செய்த தன் மூலமே அவர் கோடீஸ்வரரானார்.

வடக்கு தன்சானியாவை சேர்ந்த லைசர் என்பவருக்கு 15 கிலோ எடையுள்ள "தன்சனைட்" கற்கள் கிடைத்தன. அந்நாட்டில் இதுவரை கிடைக்காதளவு பெரிய கற்களாகும். இந்தக் கற்களை விற்பனை செய்ததன் மூலம் அவருக்கு 34 இலட்சம் டொலர்கள் - சுமார் 64.6 கோடி இலங்கை ரூபா - கிடைத்தது.

**தன்சனைட் என்றால் என்ன?**

தன்சனைட் கல் வடக்கு தன்சானியாவில் மட்டுமே கிடைக்கப்பெறும் ஆபரணம் செய்யும் கல்லாகும். இது பூமியில் கிடைக்கும் மிக அபூர்வமான இரத்தினக் கற்களில் ஒன்றாகும்.

சிவப்பு, பச்சை, ஊதா, நீல நிறங்களில் கிடைக்கும் இந்தக் கல்லின் மதிப்பு அரிதானது. சிறந்த நிறம் - தெளிவு என்பவற்றைப் பொறுத்து அதன் விலை அதிகரிக்கின்றது.

அரச அனுமதியுடன் சிறிய சுரங்கம் ஒன்றை நடத்தி வரும் லைசர் கடந்த வாரம் 9.2 கிலோ, 5.8 கிலோ எடையுள்ள இரு கற்களைப் பெற்றிருந்தார். இவற்றை அவர் விற்பனை 34 இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை செய்திருந்தார்.

**பசுக்களை பராமரிக்கவே விரும்புகிறேன்!**

4 மனைவியரைக் கொண்ட 52 வயதான லைசர் 30 பிள்ளைகளின் தந்தையாவார். இவர் பி.பி.ஸி.க்கு தகவல் அளிக்கையில்,

"எனக்குக் கிடைத்த பணத்தைக் கொண்டு வீட்டுக்கு அருகிலேயே பாடசாலை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளேன். இந்தப் பிரதேசத்தில் ஏழை மாணவர்கள் பலர் கல்வியைப் பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். நான் படித்தவன் அல்ல. ஆனால் தொழில் முறையில் இயங்குவதை விரும்புகிறேன். பாதுகாப்புக் குறித்த அச்சமும் எனக்கு இல்லை. ஏனெனில் இங்கு நான் பாதுகாப்பாக உணர்கிறேன். இந்த அதிர்ஷ்டக் காற்று எனது வாழ்க்கை முறையை மாற்றாது. நான் எனக்குச் சொந்தமான 2 ஆயிரம் பசு மாடுகளைப் பராமரிக்கவே விரும்புகிறேன்", - என்றார்.



# அமெரிக்கா எங்களிடம் மன்னிப்பு கேட்கவேண்டும்

## நஷ்டஈடும் கோருகிறது ஈரான்

தெஹ்ரான், ஜூன் 26

அதிக அளவில் அணு ஆயுதங்களை பயன்படுத்தி வந்த ஈரான் நாட்டுடன் சீனா, அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் ஜேர்மனி ஆகிய வல்லரசு நாடுகள் ஒப்பந்தம் செய்தன. இந்த அணுசக்தி ஒப்பந்தத்தின்படி, ஈரான் தனது அணு ஆயுதப் பயன்பாட்டை குறைக்க வேண்டும். அவ்வாறு செய்தால் அந்நாட்டின் மீதான பொருளாதார தடையை இந்த 6 வல்லரசு நாடுகளும் திரும்ப பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஈரானுடனான இந்த அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கடந்த 2018 ஆம் ஆண்டு மே மாதம் அறிவித்தார். மேலும் ஈரான் மீது பல்வேறு பொருளாதார தடைகளை விதித்தார். இந்த விவகாரத்தில் இரு நாடுகளுக்கும் இடையே கடுமையான மோதல் நீடித்து வருகிறது. எனினும் ஈரானுடன் பேச்சு நடத்தி புதிய அணுசக்தி ஒப்பந்தத்தை ஏற்படுத்த தயாராக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

இந்த நிலையில் அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறியதற்காக மன்னிப்பு கேட்பதுடன், ஈரானுக்கு உரிய நஷ்டஈடு வழங்கினால் அமெரிக்காவுடன் பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாக ஈரான் தலைவர் ஹசன் ருஹானி தெரிவித்துள்ளார்.

தலைநகர் தெஹ்ரானில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பேசிய ஹசன் ருஹானி இதுகுறித்து கூறுகையில் "அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஈரானுக்கு எந்த பிரச்னையும் இல்லை. ஆனால் அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறியமைக்காக அமெரிக்கா ஈரானிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். அத்தோடு அமெரிக்காவின் நடவடிக்கையால் ஈரானுக்கு ஏற்பட்ட இழப்புக்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்க வேண்டும் - என்றார்.

# 2036 வரை புடினே தலைவராக நீடிப்பார்?

ரஷ்ய ஜனாதிபதியான விளாடிமிர் புடினிடம் 2036 ஆம் ஆண்டுவரை தலைமைப் பதவியை வழங்கப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிய வருகின்றன.

ரஷ்யாவின் புதிய அரசமைப்புத் திருத்தம் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி சர்வசன வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது.

புதிய திருத்தத்தின்படி பதவியில் இருப்பவர் மேலும் இரு முறை - அதாவது தலா 6 ஆண்டுகள் பதவி வகிக்கலாம் என்று கூறப்படுகின்றது. இதற்கு ஆதரவு கிடைக்கும் பட்சத்தில் புடின் 2036 ஆம் ஆண்டு வரை பதவியில் தொடர முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் தலைநகரில் இந்துக் கோயிலுக்கு அடிக்கல்

இஸ்லாமாபாத், ஜூன் 25

இஸ்லாமிய நாடான பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் தில் முதன்முதலாக 24 கோடி ரூபா (இலங்கை மதிப்பில்) செலவில் இந்து மதக் கடவுளான ஸ்ரீகிருஷ்ணருக்கு கோயில் கட்ட அடிக்கல் நாட் டப்பட்டது.

தலைநகரின் எச் -9 பகுதியில் சுமார் 20 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் இந்தக் கோயில் அமையவுள்ளது. கோயிலுக்கான அடிக்கல் நாட்டு விழாவில் அந்நாட்டின் மனித உரிமைகளுக்கான நாடாளுமன்ற செயலர் லால்சந்த் மல்ஹி பங்கேற்றார்.

பின்னர் விழாவில் லால்சந்த் மல்ஹி பேசியதாவது:

இஸ்லாமாபாத் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிக ளில் 1947 இற்கு முன்பு வரை பல்வேறு கோயில் கட்டமைப்புகள் இருந்தன. அவற்றில் ஒன்று சைத்பூர் கிராமத்திலும், ராவல் ஏரிக்கு அருகிலுள்ள கோரங் ஆற்றை ஒட்டிய மலைப் பகுதியிலும் அமைந்திருந்தது. பிற்காலத்தில் அந்த கோயில்



கள் பராமரிப்பில்லாததால் சிதிலம டைந்தன.

கடந்த 20 ஆண்டுகளில் இஸ்லாமாபாத்தில் இந்துக் களின் எண்ணிக்கை கணிச மாக அதிகரித்தமையால் இங்கு கோயில் கட்டப்படுகிறது. இந்தக் கோவில் கட்டுவதற்கான முழுச் செலவையும் அரசாங்கமே ஏற்கும் என்பதுடன், கோயிலுக்கு சிறப்பு மானியம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்ட மத விவகாரத்துறை அமைச்சர் பிர் நூரூல் ஹக் காத்ரி தெரிவித்தார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.06.2020 அன்று வெளியிடப்பட்டது.